# மதுரை அரசு மருத்துவமனையில் முதல் இருதயமாற்று அறுவை சிகிச்சை

## 8 நிமிடத்தில் 8 கி.மீ., கடந்த 'இருதயம்'



■ மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் மூளைச்சாவு அடைந்த வாலிபரின் இருதயம் மாற்று அறுவை சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டது.

**மதுரை, அக். 26–**

மதுரை அரசு மருத்துவமனையில் முதல் இருதய மாற்று அறுவை சிகிச்சை நேற்று நடந்தது. இதற்காக, வேலம்மாள் மருத்துவமனையில் மூளைச்சாவு அடைந்த வாலிபர் இருதயம், ஆம்புலன்ஸ் மூலம் 8 கி.மீ., துாரமுள்ள அரசு மருத்துவமனைக்கு 8 நிமிடத்தில் எடுத்து வரப்பட்டது.

மதுரை உசிலம்பட்டியை சேர்ந்த வியாபாரி சவுந்திரபாண்டி,47. இவருக்கு 2016ல் இருதய பாதிப்பு ஏற்பட்டு தொடர் சிகிச்சை பெற்றார். ஆஞ்சியோ சிகிச்சை செய்தும், மூச்சு திணறலால் அவதிப்பட்டார்.

இதையடுத்து பிப்ரவரியில் மதுரை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். டாக்டர் ரத்தினவேலு பரிசோதனை செய்ததில் மாற்று இருதயம் பொருத்தவேண்டும் என தெரிவித்தார். உடல் உறுப்பு தான மையத்தில் செப்டம்பரில் பதிவு செய்திருந்தார்.

கடந்த 18 ம் தேதி ராமநாதபுரம் மாவட்டம் தேவிபட்டினம் முருகேசன்,25, டூவீலரில் சென்றபோது நடந்து சென்றவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. இதில் முருகேசன் காயமுற்று மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

கடந்த 24 ம் தேதி காலை முருகேசன் மூளைச்சாவு அடைந்தார். அவரது இருதயத்தை சவுந்திரபாண்டிக்கு பொருத்த முடிவு செய்தனர். அரசு மருத்துவமனை டாக்டர் ரத்தினவேலு, மயக்கவியல்துறை இயக்குனர் ஈவ்லின், டாக்டர் கல்யாணசுந்தரம் ஆகியோர் வேலம்மாள் மருத்துவமனையில் மூளைச்சாவு அடைந்தவரின் இருதயத்தை அறுவை சிகிச்சை மூலம் எடுத்தனர்.

அங்கிருந்து நேற்று மதியம் 1:56 மணிக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு எடுத்து வந்தனர். டிரைவர் உதயகுமார் ஓட்டினார். மதியம் 2:04 மணிக்கு 8 கி.மீ., துாரமுள்ள அரசு மருத்துவமனையை ஆம்புலன்ஸ் அடைந்தது.

அவனியாபுரம் போக்குவரத்து இன்ஸ்பெக்டர் பார்த்தசாரதி தலைமையில் போலீசார் போக்குவரத்தை நிறுத்தி, ஆம்புலன்ஸ் செல்ல வழிவகுத்தனர்.

அரசு மருத்துவமனையில் 8 டாக்டர்கள் உட்பட 20 பேர் குழுவினர் மதியம் 2:15 மணிக்கு சவுந்திரபாண்டிக்கு இருதய மாற்று அறுவை சிகிச்சை துவக்கி மாலை 5:45 மணிக்கு முடித்தனர். மதுரை அரசு மருத்துவமனையில் இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்தது இதுவே முதன்முறை என மருத்துவமனை கண்காணிப்பாளர் ஷீலா மல்லிகா ராண தெரிவித்தார்.

அரசு மருத்துவமனை டாக்டர்களுக்கு, சவுந்திரபாண்டியின் மனைவ மகன்கள் கண்ணீர் மல நன்றி கூறினர்.